[*1995 மார்ச் 28*

133—

மாவட்டங்கள்தோறும் பார்வையற்றோர் பள்ளி அமைத்தல்

* *24403*—**திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மாவட்டங்கள் அனைத்திலும் பார்வையற்றோர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்து இருக்கிறார்கள். அந்தப் பள்ளிகள் தமிழகத்தில் எங்கெங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டுகின்ற அதே நேரத்தில், சென்னையில் பார்வையற்றோர் பள்ளியில் படித்து பட்டம் பெற்ற 71 பேர்கள் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சந்தித்து வேலை வாய்ப்பு கோரினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே 50 பேருக்கு வேலை வாய்ப்புக்கு உத்தரவிட்டு அவர்கள் தற்போது வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மீதி 21 பேருக்கும் இன்னும் வேலை கிடைக்கவில்லை. இது குறித்து அரசு உடனடியாக ஆவன செய்யுமா? அது போல் தொழுநோய் ஆய்வாளர்கள் 200 பேர்கள் நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சந்தித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, எல்லா மாவட்டங்களிலும் பார்வையற்றோர் பள்ளி அமைக்கப்படுமா என்பதுதான். நீங்கள் பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது பற்றிக் கேட்டால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லலாம், அதற்காக இவ்வளவு விரிவாகப் போய்க் கொண்டிருப்பது சரியல்ல. அது சம்பந்தமாகத்தான் நீங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளைத்தான் நான் சொல்லுகிறேன், வேதனைகளைச் சொல்லவில்லை.

1995 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கிற கேள்விக்குச் சம்பந்தமான துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பார்வையற்ற ஒரு நண்பருக்கு ஒரு அனாதை ஏழைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் சமூக நலத்துறை மூலமாக டைப்பிஸ்ட் உத்தியோகம் கொடுத்து அவருடைய வாழ்க்கையை வளமாக்கி இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பள்ளியை மாவட்டந்தோறும் அமைத்தால் பார்வை இழந்த எண்ணற்ற மக்கள்—நிறையபேர் இருக்கிறார்கள்— வாழ்வு பெறுவார்கள். அவர்களுக்கு வாழ்வளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா? கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் பேசாத ஊமையாய் இருக்கிற பலபேர், நல்லதை நல்லது என்று சொல்லாமல் இருக்கின்ற இந்தக் காலத்தில், பார்வையற்றோர், காதுகேளாதோர், கண் தெரியாதோர், வாய் பேசாதோர், ஆகியோருக்கு வாழ்வளிக்கின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மாவட்டந்தோறும் அப்படிப்பட்ட பள்ளியை அமைப்பது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பள்ளியை அமைப்பது குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியை அரசே அமைக்க செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்டார்கள். இல்லை என்று சொன்னேன். மொத்தமுள்ள 23 மாவட்டங்களிலே இந்தப் பள்ளிகள் இருக்கின்றன. அரசு பார்வையற்றோர் பள்ளி அரசின் சார்பாக இருப்பது 11. அரசு மான்யம் பெற்றுவரும் பள்ளிகள் 12 இருக்கின்றன. ஆகவே எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பள்ளிகள் தற்போது செயல்பட்டுவருகின்றன. பூந்தமல்லி, திருச்சி, தஞ்சாவூர், சேலம், மதுரை, கடலூர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தருமபுரி, சிவகங்கை, நாகர் கோயில், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 973 மாணவர்கள் அதிலே பயின்று கொண்டிருக்கின்றார்கள். இந்தச் சிறப்புப் பள்ளிகள் பார்வையற்றோருக்காக அரசு மானியம் பெறும் பள்ளிகள் திருமலர் உயர்நிலைப் பள்ளி, சென்னை, புனித லூயி உயர்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை பள்ளி, வேலூர் பார்வையற்றோர் பள்ளி, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற சி. எஸ். ஐ. பள்ளி, தர்மபுரி

[*1995 மார்ச் 28*

மாவட்டம் பர்கூரிலே இருக்கிற ஐ.ஈ.எல்.சி. பள்ளி, சூசையப்பர் பள்ளி, மதுரை, அமலராக்கினி பள்ளி, திருவண்ணாமலை, அன்னை ஜே. கே. கே. சம்பூர்ணியம்மாள் பள்ளி, சேலம், லூசிய பள்ளி, தூத்துக்குடி ஆகியவை அரசு மான்யம் பெறக் கூடிய பள்ளிகள். இந்த பள்ளிகளைத் தவிர, அரசு நடத்துகிற பள்ளிகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. ஆகவே புதிதாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சராக ஆனதற்குப் பின்னால், கண் பார்வையற்றோருக்கு அதிகமான அளவிற்கு சலுகைகள் கொடுத்தார்கள். அதன் விளைவாக கண்பார்வையற்றோர் எண்ணிக்கை இப்போது குறைந்து வருகிறது. இப்போது *973* மாணவ மாணவியர்களே பயிலுகின்றனர். கூடுதலாக இல்லை. கூடுதலாக வந்தாலும் பள்ளிகளிலே இடம் இருக்கிறது. ஆகவே புதிதாகத் தொடங்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு மிக்க நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, பார்வை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட- பெண்கள்-நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி--ஏன் இன்னும் சொல்லப்போனால் கணவனால் கைவிடப்பட்ட பார்வையற்ற பெண்கள் மட்டுமல்லாமல், தகப்பனால் ஒரு அரசியல் தலைவரால் கைவிடப்பட்ட.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். வினா எண் *134* (குறுக்கீடு), ஏற்கனவே மாவட்டந்தோறும் அமைக்கவேண்டுமென்று துணைக் கேள்வி கேட்டீர்கள். ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே துணைக் கேள்வி அதிலே இல்லை.

வினா எண் *134*, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

134—

கீழ்க்கரையில் சத்துணவுக் கூடம் அமைத்தல்

36165*—திரு. வி. ரவிச்சந்திரன் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—